கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை அவர்களின் தந்தை பொன்னுச்சாமி அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (24 ம்தேதி) அவரது சொந்த கிராமமான சுப்பையா புரத்தில் அன்னாரது இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள திருஉருவச் சிலைக்கு கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் அவர்களின் தாயாரும்,கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை அவர்களின் துணைவியார் கலைச்செல்வி உடன் உள்ளனர்.

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி

ம.தி.மு.க. தி.மு.இராசேந்திரன் எம்.எல்.ஏ.நன்றி தெரிவிப்பு பொதுக்கூட்டம்!

ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ பங்கேற்பு!

தென்காசி.மே.26.

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி ம.தி.மு.க. சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தி.மு.இராசேந்திரனுக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக்கூட்டம் கடையநல்லூரில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ம.தி.மு.க.பொது செயலாளர் வைகோ பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. கூட்டணி சார்பில் போட்டியிட்ட ம.தி.மு.க. வேட்பாளர் தி.மு.இராசேந்திரன் 6,253 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இதனையடுத்து கடையநல்லூரில் வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டம் நடந்தது. ம.தி.மு.க. வடக்கு மாவட்ட செயலாளர் சுதா பாலசுப்பிரமணியன் வரவேற்றார். தி.மு. இராசேந்திரன் எம்.எல்.ஏ. ஏற்புரை வழங்கினார்.

தென்காசி தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஜெயபாலன், முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் மா.செல்லத்துரை, நகர செயலாளர்கள் அப்பாஸ், பீரப்பா, முன்னாள் எம்.எல்.ஏ.டாக்டர் சதன் திருமலைக்குமார், டாக்டர் சஞ்சீவி, தே.மு.தி.க. பழனி சங்கர், சரவணன், தங்கமாரி, ம.தி.மு.க. தெற்கு மாவட்ட செயலாளர் ராம உதயசூரியன், அவைத்தலைவர் வெங்கடேஸ்வரன், நகர செயலாளர் முருகன், கீழப்பாவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆறுமுகச்சாமி, பொதுக்குழு உறுப்பினர் குற்றாலம் ரெங்கசாமி, குற்றாலம் பேரூர் செயலாளர் வேல்ராஜ், தென்காசி நகர செயலாளர் கார்த்திக், இந்திய கம்யூனிஸ்ட் இசக்கித்துரை, மார்க்சிஸ்ட் உச்சிமாகாளி, முஸ்லிம் லீக் செய்யது மசூது, எஸ்டிபிஐ லுக்மான் ஹக்கீம், த.மு.மு.க. அப்துல்பாஷித், மமக சலீம், மஜக யாக்கூப், ஆதித்தமிழர் பேரவை தென்தமிழரசு, ஆதி தமிழர் கட்சி பொதிகைஆதவன், கலிவருணன், தமிழ் புலிகள் சந்திரசேகர், திராவிடர் தமிழர் கட்சி சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ம.தி.மு.க. மாவட்ட பொருளாளர் சுப்பையா நிகழ்ச்சியை தொகுத்துவழங்கினார்.

இந்நிகழ்வில் ம.தி.மு.க.பொது செயலாளர் வைகோ பங்கேற்று பேசியதாவது,

ஜாதி - மதம் பார்க்காமல் நேர்மையாகப் பணியாற்றுவார்!

ஜாதி, மதம், அரசியல் கடந்து மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். கடையநல்லூர் எம்.எல்.ஏ.வாக வெற்றி பெற்றுள்ள தி.மு . இராசேந்திரன் சாதி, மதம், கட்சி பேதம் பார்க்காமல் தன்னை தேடி வருபவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுப்பார். நேர்மையாகப் பணியாற்றுவார். ஒவ்வொரு பகுதிக்கும் சென்று குறைகளை கண்டறிந்து அதை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார். கடையநல்லூர் தொகுதியில் தி.மு.க.கூட்டணி வெற்றி பெறுவதற்கு கடையநல்லூர் நகராட்சி இஸ்லாமிய மக்களின் வாக்குகள் உறுதுணையாக இருந்துள்ளன. இஸ்லாமியர்களுக்கு பக்க பலமாக உறுதுணையாக நான் என்றும் இருப்பேன். தமிழக மக்கள் அனைவரும் ஜாதி மதம் கடந்து ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக 1200 கிலோ மீட்டர் நடை பயணம் மேற்கொண்டவன் நான்.

வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் நன்றி!

வேலு நாச்சியார் பிரிட்டிஷ் படைகளை எதிர்த்து போரிடுவதற்காக பீரங்கிகளையும், துப்பாக்கிகளையும் போர் வீரர்களையும் கொடுத்தவர் ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் அதன் மூலம் பிரிட்டிஷ் படைகளை வேலுநாச்சியார் தோற்கடித்தார். இது இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக இருந்ததற்கான போர் சரித்திரம். பலரின் தோல்விகளுக்கு துரோகம் தான் காரணம் என்பது திப்புசுல்தானின் வாழ்க்கையை படித்தவர்களுக்குப் புரியும்.

ஹைதர் அலி, திப்பு சுல்தான் வேலுநாச்சியாரின் வரலாறு மூலம் இந்து முஸ்லிம் ஒற்றுமையையும் போராட்டங்களையும் உணர முடியும். மக்கள் கட்சி வேறுபாடுகளை ஜாதி மத வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ வேண்டும். தி.மு. இராசேந்திரனின் வெற்றிக்கு பாடுபட்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். என்றார்.

பின்னர் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ செய்தியாளர்களிடம் கூறியதாவது.

வாழ்நாள் சிறைத் தண்டனை வேண்டும்!

புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு செயல்பாடு என்பது 6 மாதம் பிறகுதான் அரசின் செயல்பாடு தெரிய வரும். பாலியல் குற்றங்கள் மற்றும் கோவை சிறுமி கொலை வழக்கு குறித்து, இது போன்ற கயவர்களுக்கு நீதி மன்றம் ஜாமீன் வழங்கக் கூடாது. ஜாமினில் வெளி வந்தவர் தான் இந்த சின்னப் பிள்ளைகளை நாசப்படுத்தி வருகிறார்கள். எனவே தான் நீதி மன்றங்கள் இப்படிப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஜாமீன் வழங்கக் கூடாது. இது போன்ற குற்றவாளிகளுக்கு வாழ்நாள் முழுவதும் தண்டனை வழங்க வேண்டும். ஐந்து வருடம், 10 வருடம் என்பது போன்ற தண்டனை எல்லாம் வழங்க கூடாது. வாழ்நாள் முழுவதும் சிறை என தமிழக அரசு சட்டம் இயற்ற வேண்டும். இந்த சட்டத்திற்கு ஒன்றிய அரசு அங்கீகாரம் வழங்க வேண்டும். தி.மு.க. தலைமையிலான தோழமை தொடரும்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

நிகழ்வில் கழக மாவட்ட துணைச் செயலாளர் கென்னடி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகச்சாமி, சேக்தாவுது, பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், சாமித்துரை, தமிழ்ச்செல்வி, ஒன்றிய செயலாளர்கள் சுரேஷ், ரவிசங்கர், திவான் ஒலி, மணிகண்டன், செங்கோட்டை நகர செயலாளர் வெங்கடேசன், பேரூர் செயலாளர்கள் ராஜராஜன், தங்கப்பா, வெள்ளத்துரை, சிதம்பரம், முத்து, கோபால், தலைமை கழக பேச்சாளர் இஸ்மாயில், நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபூர் ரகுமான், வழக்கறிஞர் செந்தூர் பாண்டியன், மாவட்ட விவசாய அணி முருகன், நகர இளைஞரணி யாசின் கவுன்சிலர் சிட்டி திவான் மைதீன் உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம்

கரும்பாட்டூர் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!

நாகர்கோவில், மே.26-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம், கரும்பாட்டூர் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 24.05.2026, ஞாயிறு அன்று மாலை 4.00 மணியளவில் தெற்கு கரும்பாட்டூர், C.S.I. சர்ச் அருகில் வைத்து அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய செயலாளர் பா.பாபு தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லைசெல்வம், மாவட்ட பிரதிநிதி மணி உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம்: 1

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3ம் தேதி அன்று ஒவ்வொரு கிளை கழகமும் தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவ படத்தினை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதோடு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புடன் கொண்டாட வேண்டுமென ஏக மனதாக தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 2

கோவை மாவட்டத்தில் 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட சம்பவம் மற்றும் பல்வேறு இடங்களில் நடைபெற்ற கொலை, கொள்ளை, ஆளுங்கட்சியினரின் அராஜகம் போன்ற சட்ட சீர்குலைவை தடுக்க தவறிய புதிய த.வெ.க. அரசை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்: 3

ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நிலவும் குடிநீர் தட்டுப்பாடு மற்றும் தெருவிளக்கு பிரச்சினைகளை உடனடியாக சரி செய்ய வட்டார வளர்ச்சி அலுவலரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது. அதனை சரி செய்யாத பட்சத்தில் ஊராட்சி தி.மு.க. சார்பில் போராட்டம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 4

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் நாள் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி கட்சி வேட்பாளருக்காக தேர்தல் பணியாற்றிய கழகத்தினருக்கும், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய தி.மு.கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம், கரும்பாட்டூர் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஒன்றிய செயலாளர் பா.பாபு தலைமையில் மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லைசெல்வம், மாவட்ட பிரதிநிதி மணி உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், BLA– 2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 4 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தி.மு.க. - ம.ம.க. இடையேயுள்ளது கொள்கை உறவு!

எம்.ஹெச்.ஜவாஹிருல்லா தகவல்!

சென்னை, மே. 26–

தி.மு.க.– ம.ம.க. இடையிலான உறவு வெறும் தேர்தல் உறவு மட்டும் அல்ல, அது கொள்கை உறவு என மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.ஹெச். ஜவாஹிருல்லா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் ஞாயிற்றுக் கிழமை வெளியிட்ட அறிக்கை: கடந்த சில நாள்களாக, தி.மு.க.–ம.ம.க. இடையே பிரிவை உண்டாக்கும் நோக்கில் உண்மை யற்ற தகவல்கள் சமூக ஊடகங்களில் உலா வருகின்றன. தி.மு.க.– ம.ம.க. இடையிலான உறவு, வெறும் தேர்தல் உறவு மட்டுமல்ல; அதைத் தாண்டிய கொள்கை உறவாகும்.

2021, 2026 தேர்தல்களில் தி.மு.க. சின்னத்தில் ம.ம.க. போட்டியிட்டது.

இந்நிலையில், தொடர்ந்து சொந்த சின்னத்தில் போட்டியிடாத கட்சிகளின் பதிவை தேர்தல் ஆணையம் ரத்து செய்த சூழலில், மமகவின் பதிவும் ரத்தானது. இது தொடர்பான வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இச்சூழலில் கட்சியின் பதிவை மீட்க தனிச்சின்னத்தில் போட்டியிட வேண்டியது அவசியமாகிவிட்டது. இதுவே, மமக உயர் நிலை குழுவில் தீர்மானமாக நிறைவேற்றப் பட்டது.

அதாவது புதிதாக அமைந்துள்ள தவெக அரசில், தனிச்சின்னத்தில் நின்றிருந்தால் அமைச்சர் பதவி பெற்றிருக்கலாம் என்ற ஆதங்கத்தோடு அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக திரித்துப் பரப்பப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறு. குடியுரிமைத் திருத்தச் சட்ட எதிர்ப்பு போராட்டங்கள், வக்ஃப் திருத்தச் சட்ட எதிர்ப்பு போராட்டங்கள் தொடங்கி திருப்பரங்குன்றம் விவகாரம் வரை தி.மு.க. உணர்வு பூர்வமாக களத்தில் நின்றது.

இதேபோல், மாநில உரிமைகள் பாதுகாப்பு, தமிழ் மொழி மீதான ஒடுக்குமுறை எதிர்ப்பு உள்ளிட்ட பல தருணங்களில் ஒருமித்த உணர்வோடு தி.மு.க.வுடன் இணைந்து ம.ம.க. களம் கண்டுள்ளது. தமிழகத்தின் நலனைக் காக்க தொடர்ந்து இணைந்து களமாடுவோம் என்று தெரிவித்துள்ளார் எம்.ஹெச்.ஜவாஹிருல்லா.

சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

மதுரை மாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட மதுரை தெற்கு- மத்தி-வடக்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான கள ஆய்வுக் கூட்டம். கீழ்க்கண்ட விவரப்படி நடைபெற உள்ளது என்று மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அறிவிப்பின்படி,

1. மதுரை தெற்கு சட்டமன்ற தொகுதிக்கான கள ஆய்வு 27.5.26 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அண்ணாமலை ஹோட்டல் மாட்டுத்தாவணி அருகில் நடைபெறுகிறது .

2. மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்கான கள ஆய்வு 28.5.26 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அண்ணாமலை ஹோட்டல் மாட்டுத்தாவணி அருகில் நடைபெறுகிறது.

3. மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதிக்கான கள ஆய்வு 29.5.26 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அண்ணாமலை ஹோட்டல் மாட்டுத்தாவணி அருகில் நடைபெறுகிறது.

கழக இளைஞரணி மாநிலத் துணை செயலாளர் **ஜோயல்**, கழக மருத்துவர் அணி துணை தலைவர் டாக்டர் **எ.வ.வே.கம்பன்** ஆகியோர் கள ஆய்வு செய்கின்றனர்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் :25.05.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தூத்துக்குடி என். பெரியசாமி
மே 26 (2017)



ஒன்றுபட்ட நெல்லை மாவட்டத்தில் 1960ஆம் ஆண்டு முதல் கழக உறுப்பினராக பதிவு செய்து கொண்ட இவர், தொடர்ந்து தூத்துக்குடி நகருக்கு உட்பட்ட வட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்து, பின்னர் மாவட்டக் கழக பிரதிநிதியாக 1977ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். அதனைத் தொடர்ந்து 1982 முதல் 1987 வரை தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகவும், அதன்பின்னர், தூத்துக்குடி மாவட்டக் கழகச் செயலாளராக 1987 முதல்.தொடர்ந்து தனது இறுதி காலம் வரை தலைவர் கலைஞர் அவர்களின் தடம் மாறாத தொண்டராகப் கழகப் பணியாற்றியவர். கழகப் பணிகளோடு, தொழிலாளர் நலனினும் அதிக அக்கறை கொண்ட இவர் தூத்துக்குடி மாவட்டத்தில் 36 தொழிற் சங்கங்களில் தலைவராக இருந்தவர்.

தூத்துக்குடி நகர்மன்றத் தலைவராகவும் – 1989,1996 ஆண்டுகளில் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று, இரு முறை சட்டப்பேரவை உறுப்பினராகப் பணியாற்றினார்.

1993ஆம் ஆண்டு கழகத்திற்கு சோதனை வந்த காலத்தில், தூத்துக்குடி மாவட்டத்தை கழகக் கோட்டையாக காத்து நின்றவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் மேல் கொண்ட அளவு கடந்த பற்றின் காரணமாக, தலைவர் கலைஞர் அவர்களே, இவரை "என்னுடைய முரட்டு பக்தன்" என்று மனமாரப் பாராட்டியவர். 2016ல் தலைமைக் கழகத்தின் சார்பில் வழங்கப்படும் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்களால் பெற்றவர். "என் மீது தனிப்பட்ட பாசத்தையும் வைத்திருந்தவர் அண்ணன் தூத்துக்குடி பெரியசாமி அவர்கள் என்பதை நினைக்கும் போது, பெருமைமிக்க தொண்டரை இழந்த சோகம் எங்களை உலுக்கிக் கொண்டிருக்கிறது." என்று கழகச் செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.